# நாட்டு நலப்பணி திட்ட விழிப்புணர்வு முகாம்



■ மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரியில் விழிப்புணர்வு முகாம் நடந்தது.

**மார்த்தாண்டம், அக். 6–** மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரியில், உன்னத் பாரத் அபியான் நாட்டு நலப்பணி திட்டத்தின் சார்பில் இந்தியாவை மாற்றும் பெண்கள் என்ற தலைப்பில் விழிப்புணர்வு முகாம் நடந்தது.

கல்லூரி முதல்வர் (பொறுப்பு) டாக்டர் ஷீலா கிறிஸ்டி தலைமை வகித்தார். உன்னத் பாரத் அபியான் ஒருங்கிணைப்பாளர் டாக்டர் பிரீடா மேபல் ராணி வரவேற்றார்.

சிறப்பு விருந்தினர் வஜ்ரா மிர்தா, மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் மற்றும் அதற்கான தீர்வுகள் குறித்து பேசினார். என்.சி.சி கேப்டன் டாக்டர் பாய்டு வெஸ்லி பேசினார். உறுப்பினர் டாக்டர் ஜோஸ் பால் நன்றி கூறினார்.